<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண்.6/2024

பெயர் – அன்புமணி(PW1)

நாள் – 11.07.2025

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் விசாரணை ஆகியவற்றில உள்ள சங்கதிகள் யார்சொல்லி நான் போட்டேன் என்றால் எனது அண்ணன் அன்புராஜா போட்ட வழக்கினை நான் தொடர்ந்து நடத்துகிறேன். நான் படிக்கவே இல்லை. எனது அண்ணன் போட்ட வழக்கின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் சொன்னார் எனது நினைவில் இருக்கிறது.

2) எனது ஊர் சாத்தூர் வட்டம், அணைக்கரைப்பட்டி கிராம் என்றால் சரிதான். நான் பிறந்த நாள் முதல் அணைக்கரைப்பட்டியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் இருக்கன்குடியில் வசித்து வந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிறந்து, வளர்ந்தது, தற்போது வசித்து வரும் இடம் அணைக்கரைப்பட்டி கிராமம் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் கே.அன்புராஜா ஆவார். குருவம்மாள், கவிதாஸ்க்கு பிறந்தவர்கள் யார் என்றால் நானும், அன்புராஜா இருவரும்.

3) கடந்த 17.01.2023 ம் தேதி எனது அண்ணன் அன்புராஜா இறந்துவிட்டார். எனது அண்ணனின் இறப்பு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு 1 பெண் பிள்ளை உள்ளது. அவரது மனைவி உயிரோடு இருக்கிறார். அவரது மனைவி மற்றும் பிள்ளைகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை கவிதாஸ் இறந்துவிட்டார், அவரது இறப்பு சான்றிதழ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை.

4) ஆதியில் வழக்கு சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டதென்றால் பொன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்டது. பொன்னுச்சாமி, அன்புத்தாயும் எனது பெரியம்மா ஈஸ்வரியின் பிள்ளைகள் என்றால் சரிதான். ஈஸ்வரியின் அம்மா பெயர் குறித்து எனக்கு தெரியாது. ஆதியில் இந்த சொத்தானது ஈஸ்வரியின் தாயார் மாரியம்மாளுக்கு பாத்தியப்பட்டதென்றும் அவர் இறந்த பின்னர் ஈஸ்வரி அனுபவித்து வந்து பின்னர்

பொன்னுச்சாமி மற்றும் அன்புத்தாய் ஆகியோருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், நான் ஒரு போதும் தாவா சொத்தினை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தினை எந்த வகையில் அனுபவித்து வருகிறேன் என்றால் அந்த இடத்தில் விவசாயம் செய்து வந்தோம். தற்சமயம் விவசாயம் செய்யவில்லை. பொன்னுச்சாமிக்கு பிள்ளைகள் எதுவும் கிடையாதா என்றால் இல்லை, திருமணமே நடைபெறவில்லை. இந்த நீதிமன்றத்தில் பொன்னுச்சாமியின் வாரிசுஎன்று நிவாரணம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமிக்கு நான் நேரடி வாரிசு இல்லை என்றும், நீதிமன்றத்தினை அனுக வேண்டும் என்று ஒரு குறிப்பாணை என்னால் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் பொன்னுச்சாமி என்பவருக்கு நாங்கள் நேரடி வாரிசாக இ ல்லாத காரணத்தினால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தலாம் என்று குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அந்த ஆவணமே தவறு. வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பால்பொன்னுச்சாமிக்கு அவரது தங்கை அன்புத்தாய் மட்டுமே சட்டப்படியான வாரிசு என்றால் சரியல்ல.

7) அவ்வாறு நான் பொன்னுச்சாமியின் வாரிசு இல்லாத காரணத்தினால் வழக்கிடை சொத்து குறித்து எந்த நிவாரணமும் என்னால் உரிமை கொண்டாட முடியாதென்றால் சரியல்ல. 1985 ம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொன்னுச்சாமி மற்றும் அன்புத்தாய் ஆகியோருக்கு கூட்டாக புல எண்.90/5, பட்டா எண்.668 வழங்கப்பட்ட விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.மேற்படி கூறிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) மேலும் இருக்கன்குடி, மேலமடை கிராம ஆ.பதிவேடு நகலில் பொன்னுச்சாமி மற்றும் அன்புத்தாய் ஆகியோர் பெயரில் கூட்டாக பட்டா பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 1ம் பிரதிவாதியோடு கூட்டாகவோ அல்லது தனியாகவோ வழக்கில் கண்ட சொத்தினை நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி இறப்பிற்கு பின்னால் கூட்டாக ஏற்பட்டிருந்த பட்டா பொன்னுச்சாமியின் பெயர் நீக்கப்பட்டு 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டாஎண். 3130

எண் பட்டாவாக அன்புத்தாய் என்பவருக்கு மாறுதல் செய்யப்பட்டு கொடுக்கபட்டதென்றால் சரிதான். அது நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 5 ஆகும். வா.சா.ஆ. 5 ஆனது கொடுக்கப்பட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

9) நான் பிராதில் சொன்னபடி 1ம் பிரதிவாதி எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்தது குறித்து இருக்கன்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் புகார் கொடுத்துள்ளேன். நான் தாவா சொத்தை அனுபவிக்கும் கிடையாது, அந்த சொத்தை 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்ய அவசியமும் கிடையாது என்றால் சரியல்ல, நான் குழந்தையாக இருக்கும் போதே அடித்துவிரட்டி விட்டார்கள், அதன் பின்னர் எந்த பிரச்சணையும் கிடையாது.

10) பட்டா மாறுதல் சம்மந்தமாக சாத்தூர் கோட்டாச்சியரிடம் முறையிட்டோம் அங்கு சரியான பதில் எங்களுக்கு கிடைக்கவில்லை, மேல் முறையீடாக மாவட்ட ஆட்சியரிடம் சென்றேனா என்றால் சென்றேன். அந்த மனுவினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் பிராதில் கோரியுள்ள ஆ மற்றும் இ ஆகிய நிவாரணங்கள் எனக்கு கிடைகக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

11) சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும், எனவே நான் கேட்டுள்ள அ பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது சகோதரர் வீட்டார்களை இந்த வழக்கில் சேர்க்காத தோஷத்தால் இந்த வழக்கு பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆள்பலமும், பணபலமும் நிறைந்தவர் என்றும் நினைத்ததை செய்யக்கூடிய திறமை படைத்தவர் என்று சொல்லியிருப்பதெல்லாம் இந்த வழக்கிற்காக ஜோடனை செய்து கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12) நானும் எனது சகோதரர் அன்பு ராஜ் ஆகிய இருவரும் இந்த சொத்தை எந்த வகையிலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தாயார் ஈஸ்வரி உயிரோடு இருக்கும் போதே எனது தாயார் குருவம்மாளை எனது தந்தை திருமணம் முடித்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் பிரச்சணை வந்து எனது தந்தை எனது அம்மாவான குருவம்மாளோடு வாழ்ந்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

13) எனது தாயாரை இரண்டாவது திருமணம் செய்த பின்னர் எனது தந்தை ஈஸ்வரிக்கு விடுதலை கொடுத்துவிட்டு எங்களோடு நிரந்தரமாக தங்கிவிட்டார் என்றால் சரியல்ல. எனது தந்தை, ஈஸ்வரிக்கும், பொன்னுச்சாமிக்கும் இதர சொத்துக்களை எனது அம்மாவினை திருமணம் முடித்த காரணத்தினால் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது குடும்பத்திற்கும், ஈஸ்வரி அம்மா குடும்பத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

14) இந்த வழக்கு சொத்தானது பெண்வழிச்சொத்து என்றும் அதை கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை–</u>

1) இந்த வழக்கு எந்த காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா எண்.3130 (வா.சா.ஆ.5) தவறு என்ற காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். தபசில் சொத்தின் சர்வே எண்.90/5,தபசில் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டதென்றால் பால் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டது. எனதுஅப்பாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான், நான் இரண்டாம் தாரத்து மகன் ஆவேன்.

2) அன்புத்தாய் முதல் தாரத்து பிள்ளை என்றால் சரிதான். மைனர் பொன்னுச்சாமி என்பவர் முதல் தாரம் ஈஸ்வரிக்கு பிறந்தவர் என்றால் சரிதான். மைனர் பொன்னுச்சாமியின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூறிய சான்றிதழில் வாரிசுகளாக யார் யார் இருக்கிறார்கள் என்றால் அன்புத்தாய், அன்புராஜா, அன்புமணி ஆகியோர்கள் இருக்கிறார்கள்.

3) மேற்படி கூறிய வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்தது குறித்து எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் சொன்னது போல் மைனர் பொன்னுச்சாமி வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் குறித்து யார் மனு செய்தார் என்றால் அன்புராஜா செய்தார். அவர் எங்கு தாக்கல் செய்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு பட்டா மாறுதல் குறித்த விசாரணைக்கு அவர் சென்றாரா என்பது குறித்து எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் குறித்த விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தாக்கல் செய்துள்ளேன். விசாரணை அறிக்கையின் விவரம் குறித்து எனக்கு தெரியாது.

4) நான் மைனர் பொன்னுச்சாமியின் நேரடி வாரிசு கிடையாதென்றும், பட்டா மாறுதல் குறித்து வட்டாச்சியர் அனுப்பிய குறிப்பாணை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் முறையாக விசாரணை செய்து அன்புத்தாய்க்கு பட்டா வழங்கப்பட்டதால், நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.